# கோவிலில் தெய்வ தரிசனத்திற்கு முன்புள்ள காரியங்களின் சாஸ்திரம்

(Science underlying the acts before having darshan of a Deity in a Temple)

## இந்நூலின் அட்டவணை

**(அத்தியாயங்களிலுள்ள முக்கிய தலைப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.)**


卐 **முன்னுரை** **7**

1. கோவிலின் முக்கியத்துவம் 8
2. கோவிலில் தரிசனம் செய்வதன் மஹத்துவம் 11
3. 'மந்திர்' என்ற வார்த்தையைக் காட்டிலும் கோவில் அல்லது தேவாலயம் எனும் வார்த்தையை உபயோகிப்பது சரியானது 13
4. கோவில் அமைப்பின் ஏழு நிலைகளும், அவற்றின் தத்துவங்களும், முக்கியத்துவமும் 13
5. கோவில் தரிசனத்தின் சரியான முறை (தெய்வ தரிசனத்திற்கு முன்புள்ள செயல்பாடு) 15
6. கோவிலுக்குள் நுழையும்முன் செய்ய வேண்டிய காரியங்களும் அவற்றின் சாஸ்திரமும் 19
7. கோவில் தரிசனத்திற்காக ஸபாமண்டபம் நோக்கி செல்லும்போது செய்ய வேண்டியவை 35
8. கோவில் படிகளில் ஏறுதல் 37
9. ஸபா மண்டபத்திற்குள் நுழைதல் 40
10. மண்டபத்திலிருந்து கர்ப்பக்ருஹம் நோக்கி செல்லும் முறை 42
11. தெய்வ தரிசனத்திற்கு முன்பு செய்ய வேண்டிய செயல்கள் 44
12. கோவில் தரிசனத்துடன் ஸம்பந்தப்பட்ட சில அனுபூதிகள் 45

卐 பின் இணைப்பு – ஹிந்துக்களே, ஹிந்துக்களின் பெரும்பான்மை கோவில்களின் பரிதாபகர நிலையை மாற்ற செயல்படுங்கள்! 50

# நூலின் முன்னுரை

'தேவாலயம்' அல்லது கோவில் என்பது தெய்வங்களின் ஆலயம் அதாவது ப்ரத்யக்ஷமாக கடவுள் இருக்கும் இடம். 'கோவிலுக்கு சென்றால், கடவுள் நம் விருப்பங்களை ஏற்றுக் கொள்கிறார். அதுவே நமக்கு மன நிம்மதியைக் கொடுக்கிறது', என்ற நம்பிக்கையுடன் பக்தர்கள் தேவாலயம் செல்கின்றனர். கடவுள் பக்திக்காக காத்திருக்கிறார் என்பார்கள். பக்தியுணர்வு உடைய ஒருவன் எந்த விதத்தில் கடவுளை தரிசித்தாலும் அவன் கடவுளின் அருளை உணர்கிறான். ஆனால் சர்வசாதாரண மனிதனிடம் அந்த அளவு பக்தி கிடையாது. அதனால் அவன் சரியான வழிபாட்டு முறைகளை அறிவது அவசியமாகிறது.

புகையினால், மங்கி இருக்கும் விளக்கை சுத்தம் செய்தால்தான், விளக்கின் ப்ரகாசம் வெளியே முழுவதும் தெரியும். அவ்வாறே, ரஜ-தம குணங்களை விலக்கினால்தான், கடவுளை வணங்கும் போது பக்தியுணர்வாகிய ஜோதி அந்தராத்மாவில் சுடர் விடும்; அப்போதே கடவுளிடமிருந்து வெளிப்படும் சைதன்ய பிரகாசத்தை மற்றும் அருட்பிரசாதத்தை உணர முடியும். சைதன்யம் எனும் உணர்வை அடைவது எப்படி? சரியான வழிபாட்டு முறைகளினால்தான். சரியான வழிமுறைகளோடு அதன் சூட்சும சாஸ்திரமும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது. இது நம்பிக்கையை வளர்த்து நம் தர்ம சாஸ்திரங்களின் மீதும் ஈடுபாட்டை உண்டாக்கும்.

ஏன் கால்களை சுத்தப்படுத்திக் கொண்டுதான், தேவாலயத்திற்கு செல்ல வேண்டும்? தெய்வ தரிசனத்தின்போது என்ன பிராத்தனை செய்ய வேண்டும்? பிரதக்ஷிணத்தை ஏன், எப்படி மற்றும் எவ்வளவு முறை செய்ய வேண்டும்? என்பது போன்ற சந்தேகங்களுக்கு, இந்நூலில் விடைகள் அளிக்கப்படுள்ளன.

இந்நூலினைப் படித்து சரியான வழிமுறைகளை தெரிந்து கொண்டு, கடவுளை வழிபட்டு மற்றும் இது சம்பந்தமாக மற்றவருக்கும் போதனை வழங்கினால் இந்நூலை எழுதிய பலனைப் பெற்றோம் என உணர்வோம். அவ்வாறே நடத்தித் தர வேண்டும் என ஸ்ரீ குரு சரணங்களில் பிரார்த்தனை செய்கிறோம். - **தொகுத்தவர்**